தெரிகிறது. தமிழ்நாட்டிற்கு எத்தனை ஒதுக்கப்பட்டிருக்கிறது? அப்படி ஒதுக்கவில்லையென்ருல், தமிழ்நாட்டிற்கு அந்த இன ஆடுகளை ஒதுக்க வேண்டுமென மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் ஆஸ்திரேலிய இனமான கொரிடேல் 5 கிடாய்களும், ரஷ்ய இனமான மெரினே பல ஆடுகளும் தேவை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மத்திய அரசு எவ்வளவு ஒதுக்கும் என்பது தெளி வாகத் தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இம்மாதிரி யான கால்நடைப் பண்ணைகள் ஆரம்பித்தவை சரியாக நடைபெற வில்லையென்று சொல்லப்படுகிறது. ஒசூர் பண்ணையாவது நல்ல முறையில் நடைபெறுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆடு இன விருத்தியைப் பொறுத்தவரையில் அது சாத்தூர் பண்ணையாக இருந்தாலும், சின்னசேலம் பண்ணையாக இருந்தாலும் இப்போது செம்மையாக இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அந்த இன ஆடுகள் பெருக்கம் எல்லாம் இந்தப் பண்ணை களில் மட்டும் நடைபெறுவதால் அதிக முன்னேற்றத்தைக் கண்டுவிட முடியாது. ஆங்காங்குள்ள பஞ்சாயத்துக்களின் மூலமாகவோ, தனியார் மூலமாகவோதான் அம்மாதிரியான ஆடுகளை வாங்கி இனவிருத்தி செய்வதன் மூலமாகச் சிறந்த பலன் விளையும். ஆடு வளர்ச்சியிலே இந்தத் துறையினர் சிறந்த தனிக் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

Mechanised fishing boats

* 553 *Q*.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sanctioned a scheme for grant of financial assistance to private people for purchase and operation of mechanised fishing boats; and

(*b*) if so, the details thereof and the total amount sanctioned to the scheme?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மீன்பிடி படகுகள் வாங்கவும், இயக்கவும், தனியார் தொழில் முனைவர்களுக்கு படகின் விலையில் 20 சதவீதம் வட்டியில் லாக் கடனுகை அரசு நிதியுதவிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1972 மார்ச் 18]

தொழில் முனைவரே மூலதனத்தில் 20 சதவீதத்தைச் செலுத்த வேண்டும்; மீதமுள்ள 60 சதவீத மூலதனத்தை வேளாண்மை மறுநிதிக் கழகம், வேளாண்மை நிதிக் கழகம், வணிக வங்கிகள் போன்ற நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வட்டியில்லாக் கடனை அரசு வழங்கும். 30 அடி நீளமுள்ள 40 படகுகள், 32 அடி நீளமுள்ள 10 படகுகள் ஆகியவற்றைத் தொழில் முனைவர்கள் வாங்குவதற்காக 1971–72ல் ரு. 5,60,000 வட்டியில்லாக் கடனாக அளிக்கப்பட (படகு விலையில் 20 சதவீதம்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

வெள்ளியணைப் பகுதியில் பாய் நெசவு

* 554 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், வெள்ளியணைப் பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோர் பாய் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் அங்கு கூட்டுறவு முறையில் பாய்த் தொழிலை அபிவிருத்தி செய்யத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கிராமப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் இதுபோன்ற சிறு தொழில்களை கிராமப் பகுதிகளில் ஊக்குவித்தால சிறப்பாக இருக்கும் என்பதால், இனிமேலாவது இதுகுறித்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் சிறுதொழில்களுக்கென்ற பல திட்டங்கள் அரிசன நலத் துறையின் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக பாய் நெய்கின்ற தொழிலுக்கு திருச்சியிலே மத்திய நிலையம் ஒன்று இருக்கிறது. அதன் தொடர்பாக தஞ்சாவூர், தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் பாய் நெய்யும் தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனவேதான் கரூரில் தனியாக தொழிற்சாலையை ஏற்படுத்தவில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கிற தனித் தொகுதிகளிலே அரிசன நலத்